


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இலண்டன் நகரில், அஸ்ட்ரா ஜெனெகா (Astra Zeneca) நிறுவனம் சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை (GITC) 176 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்வது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்தின் இந்தியாவிற்கான தலைவர் பிரவீன் அக்கினேபள்ளி, வணிக டிஜிட்டல் மற்றும் ஐ.டி. தலைவர் (சர்வதேசம் மற்றும் ஜப்பான்) நிக் பாஸி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், இலண்டன் நகரில், இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமம், மின்சார வாகனங்களுக்கான செல் மற்றும் பேட்டரி உற்பத்தி, BESS (பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்பு) மற்றும் மின்சார சார்ஜிங் நிலையங்களுக்கான வணிகங்களில் 7500 கோடி ரூபாய் முதலீட்டில் 1000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, இந்துஜா குழுமத்தின் தலைமை நிர்வாகி தீரஜ் இந்துஜா, இந்துஜா குழுமத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ரூ.15,516 கோடி முதலீடு; 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

# திராவிட மாடல் அரசின் செயல்பாடு இதுதான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!




**லண்டன், செப்.7-**

**இதுதான் திராவிடமாடலின் செயல்பாட்டு உணர்வு என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ரூ.15,516 கோடி முதலீடு ஈர்த்தது குறித்தும் 17,613 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது குறித்தும் விவரித்துள்ளார்.**

TN RISING இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி பயணத்தில் ரூ.15,516 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளது குறித்தும், இதன்மூலம் நமது இளைஞர்களுக்கு 17,613 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது குறித்தும்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**லண்டனில் இருந்து உற்சாகமான செய்தி!**

**இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமம், தமிழ்நாட்டின் மின்சார வாகனச் சூழலில், பேட்டரி சேமிப்பு அமைப்புகளுக்காக 7,500 கோடி ரூபாய் முதலீடு செய்யவுள்ளது. இது 1,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.**

**ஆஸ்ட்ராஜெனெகா நிறுவனத்தின் விரிவாக்கம் மற்றும் முந்தைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், TN RISING இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி பயணத்தில் ரூ.15,516 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளது, இது நமது இளைஞர்களுக்கு 17,613 வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.**

**இவை வெறும் எண்கள் அல்ல இவை வாய்ப்புகள், எதிர்காலம் மற்றும் கனவுகள். இதுதான் திராவிட மாடலின் செயல்பாட்டு உணர்வு.**

இவ்வாறு மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### என்றென்றும் தந்தை பெரியார் வழியில்

# திராவிட மாடல் அரசு தொடரும்! சாதிக்கும்!

## இலண்டனில் 2 நூல்கள் வெளியீட்டு விழா

## குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் உறுதி!






**இலண்டன், செப்.7–**

**இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக விழாவில் இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா குறித்து தமது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘உறுதியோடு சொல்கிறேன், என்றென்றும் பெரியார் வழியில் திராவிட மாடல் அரசு தொடரும் சாதிக்கும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.**

இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கில் இரண்டு நூல்கள் வெளியிட்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஆக்ஸ்ஃபோர்டில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கு!

தந்தை பெரியார் நிகழ்த்திக் காட்டியதெல்லாம் ஆயுதமேந்தாத இரத்தம் சிந்தாத புரட்சிகள்!

இந்நிகழ்வின்போது, பெரியாரின் சிந்தனைகள் போராட்டங்களை உலகம் முழுதும் கொண்டுசெல்லும் வகையில், வரலாற்றாய்வாளர் ஆ.இரா.வெங்கடாசலபதி மற்றும் முனைவர் கார்த்திக் ராம் மனோகரன் தொகுத்துள்ள The Cambridge Companion To Periyar நூலையும்;

பெரியார் தொடங்கிய சமூக இயக்கத்தில் இருந்து வெகுசன மக்கள் இயக்கமாகக் கிளைத்த தி.மு.கழகம் ஆட்சியைப் பிடித்து, தமிழ்நாட்டின் போக்கையே மாற்றியமைத்த புரட்சி வரலாற்றை, இளம் ஆய்வாளரான முனைவர் விக்னேஷ் கார்த்திக் அவர்கள் ஆய்வுநடையில் வெளிப்படுத்தியுள்ள The Dravidian Pathway நூலையும் வெளியிட்டேன்.

ஒரு சீர்திருத்தவாதி, தான் பரப்புரை செய்த கருத்துகள் எல்லாம் அரசாணைகளாக மாறிச் செயல்வடிவம் பெறுவதைக் கண்ட பெருமை தந்தை பெரியாருக்கே உரியது. அவற்றைச் செயல்படுத்திய பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கும்முத்தமிழறிஞர் கலைஞருக்கும் நமது திராவிட மாடல் அரசுக்கும் உரியது.

உறுதியோடு சொல்கிறேன், என்றென்றும் பெரியாரின் வழியில், நமது திராவிட மாடல் அரசு தொடரும்! சாதிக்கும்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தேவையான நிதியை ஒதுக்காமல் — பா.ஜ.க. அரசு

# 100 நாள் வேலைத் திட்டத்தை சீர்குலைக்க முயற்சி!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 7-

100 நாள் வேலைத் திட்டத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்காமல், அதனை சீர்குலைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சிப்பதாக காங்கிரஸ் குற்றம் சாட்டி உள்ளது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், 100 நாள் வேலை திட்டம் சட்டமாக மாறி. 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதாகவும், உலகின் மிகப்பெரிய சமூக நலத் திட்டத்தின் பல சாதனைகளை நாம் நினைவு கூர வேண்டிய நிலையில், மோடி அரசின் கீழ் இத்திட்டம் மிகவும் நிச்சயமற்ற எதிர்காலத்தை கொண்டுள்ளதாகவும், இதனை எதிர்த்து நாம் போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சகத்தின் விதிமுறைகள், நிதியாண்டின் முதல் பாதியில் பட்ஜெட்டில் உள்ள செலவினங்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமாக அரசுத் திட்டங்கள் செலவிடுவதைத் தடைசெய்துள்ளதாகவும், ஆனால், 100 நாள் வேலைத் திட்டத்திற்கு பொறுப்பான அமைச்சகம் தனது பட்ஜெட்டில் 60 சதவீதத்தை 5 மாதங்களுக்குள் முழுமையாகச் செலவிட்டுள்ளதால், கோடிக்கணக்கான கிராமப்புற குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளதாகவும், இந்த நெருக்கடி 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கும் மோடி அரசின் திட்டமிட்ட சதி என்றும் அவர் குற்றம்சாட்டி உள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளாக 100 நாள் வேலைத் திட்டத்திற்கான நிதி போதிய அளவில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும், பணவீக்கம் அதிகரித்துள்ள போதிலும், கடந்த 3 ஆண்டுகளாக பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள ஜெய்ராம் ரமேஷ், இது திட்டத்தின் தேவை மற்றும் தொலைநோக்குப் பார்வையை கேலிக் கூத்தாக்குவது ஆகும் என்றும் விமர்சித்துள்ளார்.

கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைத் தேவைப்படும் நேரத்தில் அவர்களுக்கு அந்த வாய்ப்பை மோடி அரசு மறுப்பதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி உள்ளார்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் நடைபெற்ற நாங்குநேரி மேற்கு ஒன்றியச் செயலாளர் சுடலைக்கண்ணு சகோதரர் இல்லத் திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று மணமக்கள் மாரியப்பன், சுகன்யா ஆகியோர்க்கு வாழ்த்து தெரிவித்தார். உடன் அமைச்சர் மனோ தங்கராஜ், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பிரபாகரன், சித்திக், மாநில நிர்வாகி ஆவின் ஆறுமுகம், ஜார்ஜ் கோசல் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், தமயந்தி, சுடலைக் கண்ணு, செல்வகருணாநிதி, ஜோசப் பெல்சி, எரிக்ஜுடு உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### யோகேஸ்வரி மணிமாறன் தலைமை! மைலம் ஒன்றியம்

# மைலம் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மைலம், செப். 7–

மைலம் ஒன்றியம் மைலம் ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏதொடங்கி வைத்து பயனாளிகளுக்குநலத்திட்ட உதவிகளை வழங்கினார்.ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் மைலம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்நடைபெற்றது. மயிலம் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார். மைலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கிமுகாமினை தொடங்கி வைத்தார்.

முகாமில் மைலம், தென் ஆலபாக்கம், தென் கொளப்பாக்கம்,ஆகிய ஊராட்சிகளில் இருந்துஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டுமனை பட்டா குடும்ப அட்டை முதியோர் ஓய்வூதியம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், மின் இணைப்பு பெயர் மாற்றம் கேட்டு கோரிக்கை மனு அளித்தனர்.

இதைத்யடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வெங்கந்தூரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமைநேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார்.

அப்போதுபொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரியிடம் கேட்டு அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்து மயிலம் வட்டார அரசு மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், சர்க்கரை நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லம் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை பெட்டகம் அடங்கிய தொகுப்பினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்வ எம்.எல்.ஏ. ழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி,சேது நாதன்,மாநிலத் தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய செயலாளர் மணிமாறன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,மாவட்ட கவுன்சிலர் விஜயன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கோவிந்தசாமி, டேவிட் குணசீலன்,ஒன்றிய கவுன்சிலர்செல்வகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் சிவகுமார்,எத்திராஜ் ,சந்திரன்,மாவட்ட பிரதிநிதி வீடூர் பிரகாஷ்,மாவட்ட சிறுபான்மையினர் அணி நல அமைப்பாளர் அன்சாரி,விவசாய அணி தலைவர் நெடி சுப்பிரமணியன்,உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,திமுக நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி மணிமாறன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, வையங்குடி, கோடங்குடி, பட்டூர் ஊராட்சியில் மக்கள் குறை கேட்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு மக்களிடம் குறைகளை கேட்டறிந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், நகரக் கழகச் செயலாளர் வி.பி.பரமகுரு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.